ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2478/06 - 2026 මාර්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2026.03.03

*2478/06 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

### 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இந்த கட்டளையின் மூலம் ஏப்பிறல் 28 ஆந் திகதிய 2434/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 2025, சனவரி 10 ஆந் திகதிய 2418/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையின் அதனகத்தேயுள்ள அட்டவணை 1 உடன் இதனகத்தேயுள்ள அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நிரல் III இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு முறையே நிரல்கள் I மற்றும் II இல் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுமுறைத் தலைப்புகள் மற்றும் இயைபுமுறைக் குறியீடுகளுக்கு நேரொத்த. நிரல் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி தீர்வை விகிதம் ஆகியவற்றைச் சேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

1A - PG 7555 - 403 (2026/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

| *இயைபுமுறை தலைப்பு* | *இயைபுமுறை குறியீடு* | *விபரம்* | *உற்பத்தி தீர்வை* |
|---|---|---|---|
| *I* | *II* | *III* | *IV* |
| 84.50 | | **வீட்டுப் பாவனை அல்லது சலவைத் தொழில் பாவனைத் துணி துவைக்கும் இயந்திரங்கள், கழுவி உலர்த்தும் தொழிற்பாடுகளைக் கொண்ட இயந்திரங்கள் அடங்கலாக.** | |
| | 8450.20.10 | 15 கி. கிராமிற்கு மேற்படாத உலர் துணிகளுக்கான கொள்ளளவைக் கொண்டவை | 25% |
| | 8450.20.90 | பிற | 25% |

இந்த கட்டளையானது 2026, ஏப்பிறல் 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2026, மாச்சு 03.

EOG 03 - 0016

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது